நிதிவு எண்: M. 6511 ★ தோலைபேசி: 51881 நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 22 (6—8—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 23 (7—8—68) புதன் [இதழ்: 45

'ஆரோவில்' நகருக்கு...

முதல் கட்டத்தில் ரூ. 41.72 கோடி செலவாகுமாம்

புதுடில்லி, ஆக. 5—

"புதுவையில், அமைய விருக்கும் அனைத்துலகக் கலாச்சார நிறுவனமான 'ஆரோவில்' நகருக்கு முதற் கட்டமாக ரூ. 41.72 கோடி செலவாகுமெனக் கணக்கிடப்

(4-ம் பக்கம் பார்க்க)

காமராசர் ஆண்ட காலத்தில் நீதி எங்கே போயிற்று?

காங்கிரசார் கருணைவான்களாக மாறியது எப்போது?

அண்ணா ஆட்சிமீது பழிபோடும் 'அராஜக'வாதிகளுக்கு அமைச்சர் மு. கருணாநிதி தரும் பதில்

சென்னை, ஆக. 5 –

"ஒரு தடியடிக்காக நீதிவிசாரணை கேட்கிறார் சுப்பிரமணியம் அவர்கள்---காமராசர் முதலமைச்சராக ஆட்சியில் இருந்தபோது 40 உயிர்கள் பறிபோன நேரத்தில், 'நீதி விசாரணை தேவை' என்று சட்டமன்றத்தில் வாதாடினோம்; அப்போது நிதியமைச்சராக இருந்த சுப்பிரமணியம் என்ன கூறினார் தெரியுமா? – 'இப்படிச் சாதாரண நிகழ்ச்சிக்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால் பிறகு போலீசு வேலைக்கு யாரும் வரமாட்டார்கள்' என்றுதான் கூறினார்; அதற்கு ஆதாரம் இருக்கிறது.

"ஆனால் அண்ணாவின் ஆட்சி அப்படிப்பட்டதல்ல; நடந்துவிட்ட நிகழ்ச்சியில் எந்த அசம்பாவிதம் நேர்ந்தாலும் வருத்தப்படும் ஆட்சி! தடியடி கண்டு பூரிப்பவர்களா நாங்கள்? 'வன்முறை தலைதூக்கக் கூடாது' என்பதில் எங்களுக்கு அக்கறை இருக்காதா?"

என்று புளியந்தோப்பில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் சுட்டிக்காட்டி வினவினார்.

வெளிநாடு சென்று திரும்பிய கேரளக் கல்வியமைச்சர் முகமது கோயா அவர்கட்கு முஸ்லீம் லீக் சார்பில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவில் கலந்துகொண்ட பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், கேரளக் கல்வியமைச்சரை வரவேற்றுப் பாராட்டினார்; தோழமைக் கட்சிகள் தொடர்புகள்பற்றி விளக்கினார்; அருமையான உறவுகளை வளர்த்து சிறப்புற ஆட்சி நடத்தி வரும் தி. மு. க. அரசுக்குக் களங்கம் கற்பிக்கக் காங்கிரசார் செய்து வரும் முயற்சிகளையும், வன்முறைப் போக்குகளையும் கண்டித்தார்; தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவரின் முன்னுக்குப் பின் முரணான பேச்சுக்களையும், அறிக்கைகளையும் சுட்டிக்காட்டி விளக்கம் தந்தார்.

பின்னர் அவர், காமராசர் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை நினைவுறுத்திப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"என்னைச் செய்தியாளர்கள் சந்தித்து, 'ஒரு தடியடிப் பிரயோகத்தில், 300 பேர் காயமடைந்தது இதுதான் முதற் தடவை எனக் கூறுகிறார்களே' என்று கேட்டனர்; அப்போது நான் சொன்னேன்—'நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்து போராட்டம் நடத்தியபோது, 500 பேர்—600 பேர் என்று போலீசுத் தடியடியால் காயமடைந்திருக்கிறோம். அப்போது எங்களை யாரும் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்துக் கணக்கெடுக்கவில்லை; மருத்துவமனையின் பக்கமே வர எங்களை அனுமதிக்கவில்லை!

ஆனால், இப்போது நடைபெறுவது அண்ணாவின் ஆட்சி; ஆகவே, ஒரு சில கீறல் விழுந்தாலும் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கிறார்கள். இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம் --- அண்ணாவின் கருணைமிக்க ஆட்சியை!

இப்போது போலீசுத் தடியடியால் 300 பேர் காயம்பட்டனர் என்று அறிந்து முக்காடு போட்டு மௌன ஊர்வலம் நடத்துகிறார்களே -- அவர்களைக் கேட்கிறேன் -- 1964-ம் ஆண்டில் தடியடியால் காயம்பட்டவர்கள் அல்லர்—குண்டடியால் பிணமானோர் -- சவமானோர் எத்தனைப்பேர்? அன்றையத்தினம் எத்தனைப்பேர் இரத்தம் சொட்டச் சொட்டத் தெருக்களில் பிணமாக இழுத்தெறியப்பட்டனர்? எத்தனையோ பேர் காலிழந்து -- கரமிழந்து கதறினர்!

காமராசர் முதலமைச்சராக இருந்தபோது விலைவாசி உயர்வுக் கண்டன அறப்போரை தி. மு. கழகம் நடத்தியது; அந்த அறப்போரில் கலந்துகொண்ட தோழர்களை மண்டையில் அடித்துக் காயப்படுத்தியது அன்றையப் போலீசு!

இன்று, 'மண்டையில் அடிக்கலாமா?' என்று கேட்போர் யார் -- நேற்று வரையில் மக்களை அடித்து அடித்துக் கை ஓய்ந்துபோனவர்கள்தான்!

காங்கிரசார் ஆட்சியில் நாங்கள் போகாத வெஞ்சிறை கூடமா? நாங்கள் தாங்காத தடியடிகளா?

காங்கிரசார் ஆட்சியில் முறிக்கப்பட்ட எலும்புகள் எத்தனை, எத்தனை? உங்கள் ஆட்சியில் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட மார்புகள் எத்தனை, எத்தனை?

அவர்களுடைய கொடுங்கோல் ஆட்சியில் தாலி இழந்த தையல்கள் -- பொட்டிழந்த பூவையர்கள் -- மலரும் குங்குமமும் இழந்த குல மாதர்கள் -- எத்தனை எத்தனைப்பேர்? குடும்பத்தையும் குஞ்சு குழுவான்களையும் பரதவிக்க விட்டவர்களின் பயங்கர அடக்குமுறைக்குப் பலியானோர் எத்தனை, எத்தனையோ பேர்!

தென்பாண்டி மண்டலத்தில் முதுகுளத்தூர்ப் பகுதியில் 1957-ம் ஆண்டில் ஒரு கலவரம் நடைபெற்றது; 20 நாடகள் நடைபெற்ற அந்தக் கலவரத்தில் 3 ஆயிரம் வீடுகள் எரிக்கப்பட்டன! 4 இலட்சம் ரூபாய் சேதமாயிற்று! 40 பேர்களின் உயிர் பறிபோயிற்று!

கீழத்தூவல் எனும் கிராமத்தில் ஓர் ஆலயத்தின எதிரில் ஐந்து மறவர்களைக் கண்ணைக் கட்டி – கையைக் கட்டி நிற்க வைத்து, 'ஒன்-டூ-த்ரீ' என்று அதிகாரி ஆணையிட -- நெஞ்சாங் குழியில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தனவே—அந்தக் குண்டு பாய்ந்து இறந்த மறவர்குல மாணிக்கங்களை எரியும் தீயில் தூக்கிப் போட்டனரே பட்டப் பகலில் -- அது எந்த ஆட்சியில் -- காமராசரின் ஆட்சியில் தானே!

சென்னையில் காங்கிரசார் எந்த ஊர்வலம் நடத்தினாலும் அசம்பாவிதத்தை ஏற்படுத்துகிறார்களே---ஏன என்று அவர்கள் சிந்தித்தது உண்டா?

சென்ற ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாள் நடத்திய ஊர்வலத்தில், 'முரசொலி' அலுவலகத்தைத் தாக்கி---அங்கிருந்த அண்ணா அவர்களின் படத்தைக் கிழித்துச் செருப்பு மாலை போட்டவர் யார்?

காங்கிரசார் செய்த அக்கிரமத்தைக் கவர்னரே வந்து பார்த்துச் சென்றாரே! நகரத்து மக்கள் அதற்குள்ளாக அந்தச் சம்பவத்தை மறந்துவிடுவார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்?

காங்கிரசாருடைய நினைப்பெல்லாம் 'ஏதாவது ஒரு ரகளை அல்லது அமளி ஏற்படுத்தித் தி. மு. கழக அரசைக் கவிழ்க்க வேண்டும்' என்பது தானே!

கேரளத்தில் அப்படியொரு மாற்றுக் கட்சி அரசைக் கவிழ்ததனர்---என்ன நடந்தது 1967-ல்? இருந்ததும் போய் 9-பேர்கள் மட்டும்தான் கேரள சட்டமன்றத்தில், காங்கிரசுக் காரர்களாக உட்கார்ந்திருக்கிறார்கள்!"

'தமிழ் நாடு' பெயர்சூட்டு மசோதா

தமிழக மேலவையில் விவாதத்துக்கு வருகிறது

சென்னை, ஆக. 5—

அரசியல் சட்டத்தில், 'சென்னை இராஜ்யம்' என்றிருப்பதை, 'தமிழ் நாடு' என்று மாற்ற வகை செய்யும் நாடாளுமன்ற மசோதா, ஆகஸ்டு 17-ம் நாள் தமிழகச் சட்டமன்ற மேலவையில் விவாதத்திற்கு வருகிறது.

முதலமைச்சர் அண்ணா இந்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறு அவையைக் கேட்டுக்கொள்வார்.

சட்டமன்றக் கூட்டம் ஆகஸ்டு 16-ம் நாள் தொங்குகிறது. 1968--69-ம் ஆண்டைய மின் கழக அறிக்கை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

'தாம்பூலம்' மாற்றுவதுபோல் மக்களே மாற்றிவிட்டனர்!

சென்னை, ஆக 5—

"கடந்த காலத்தில் முதலமைச்சராகப் பக்தவத்சலம் இருந்தபோது மெத்தவும் கவலைப்பட்டார் — 'நல்ல எதிர்க் கட்சி இல்லையே' என!

"நான்கூட வேடிக்கையாகச் சொன்னேன் — 'நீங்களே அடுத்தமுறை எதிர்க் கட்சியாக வந்துவிடுங்களேன்' என்று!

"அதற்கு அவர், ஆட்சிமாற்றமென்ன — தாம்பூலம் மாற்றுவது போலவா' என்றார்!

"ஆனால் மக்கள், தாம்பூலம் மாற்றுவதுபோல் மாற்றி அவர்களை எதிர்க்கட்சியில் வைத்துவிட்டார்கள்!

"'நல்ல எதிர்க்கட்சி இல்லையே, என்று இடித்துக் காட்டிய அவர்கள், 'நல்ல எதிர்க் கட்சி எப்படியெல்லாம் நடக்கவேண்டும்' என்று காட்டிவிட்டார்கள்! இதைப் பாடமாகவைத்துக்கொள்வோம்!

"அடுத்த தேர்தலில் — 'ஆண்டவன், அவர்கள் பக்கமிருந்து —அவர்கள் ஆளும் கட்சியாகவும், நாம் எதிர்க் கட்சியாகவும் ஆகும் நிலை ஏற்பட்டதென்றால், இப்போது இவர்கள் செய்ததை திருப்பி நாங்கள் செய்ய அதிக நேரம் பிடிக்காது என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

-- மு. கருணாநிதி

(சென்னை--புளியந்தோப்பு பாராட்டு விழாவில்)

கழகத் தேர்தல்

ஒத்திவைக்கப்பட்ட

வட்டக் கழகத் தேர்தல்

11-8-68 ஞாயிறு அன்று நடைபெறும்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி ஆகஸ்டு 3, 4-ம் நாட்களில் நடைபெற்ற வட்டக் கழக—வட்டத் தகுதி படைத்த பெருநகரக் கழகங்களின் தேர்தல்களில் ஒத்திவைக்கப்பட்ட வட்டக் கழகங்களின் தேர்தல்களும், பெருநகரக் கழகங்களின் தேர்தல்களும் நடைபெற்ற வட்டக் கழகத் தேர்தல்களில் தேர்தல் நடைபெறாத பொறுப்புக்களுக்குரிய தேர்தல்களும்;

நடைபெற்ற வட்டக் கழகத் தேர்தல்களில் விடுபட்டுப்போன பொறுப்புக்களுக்குரிய தேர்தல்களும்--

11--8--68 அன்று நடைபெறும்.

முழு விவரம் நாளை வெளியிடப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம்

சியோல், ஆக. 5—

தென் கொரியப் பாதுகாப்பு அமைச்சரைப் பதவிநீக்கம் செய்து அந்நாட்டு அதிபர் உத்தரவிட்டுள்ளார்,

சில முக்கியமான இராணுவத் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

தஞ்சையில் அமைந்துள்ள பால் பதனத் தொழிற்சாலை

சென்னை, ஆக. 5—

தஞ்சைப் பகுதியில் பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் தஞ்சாவூர் நகர கூட்டுறவுப் பால் வழங்கு சங்கம் தஞ்சையில் பால் பாதன நிலையம் ஒன்றையும், மன்னார்குடியில் குளிர் சாதனம் ஒன்றையும் ஏற்படுத்தும் திட்டமொன்றை அரசு 1963-ல் அனுமதித்தது.

இவைகளுக்கு மொத்தச் செலவு மதிப்பீடு ரூ 17-இலட்சம்; இதில் ஒரு பாதி கடன்-மறு பாதி மானியமாகும். அதன்படி சங்கம் தஞ்சாவூரிலும் மன்னார்குடியிலும் நிலம் வாங்கி, 1964—65-ல் கட்டிடங்களைக் கட்டத் தொடங்கியது.

பால் பதன நிலையம் சென்ற ஆண்டில் முடிக்கப்பட்டு, 1967 செப்டம்பரில் உற்பத்தி தொடங்கியது; மன்னார்குடி குளிர் சாதனம் விரைவில் இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பால் விரைவில் கெட்டுப் போகக்கூடிய பொருளாக இருப்பதால், இப்பகுதியில் பால் பதன நிலையம் அமைந்தது -- பால் உற்பத்தியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள அதிக உதவியாக இருக்கிறது.

தஞ்சாவூர் சங்கம் உள்ளூர்த் தேவைக்கு வழங்கியது போக, அதிகமாக இருக்கும் பாலை, சென்னைப் பால் பண்ணைத் திட்டத்திற்கு அனுப்பிவைக்கிறது.

1967 செப்டம்பரில் பால் பதன நிலையம் முடிவடைந்தபிறகு 14,517 லிட்டர் பாலைச் சென்னைக்கு அனுப்ப அதனால் இயன்றது; ஆனால், 1968 சூன் திங்களில் அது 2,35,000 லிட்டர் பால் அனுப்பியிருக்கிறது. பால் பதன நிலையம் தனது இலட்சியத்தில் வெற்றியடைந்துவிட்டது என்பதற்கு இதுவே சான்றாகும்.

தஞ்சைப் பால் பதன நிலையத்தின் கொள்ளளவு நாளொன்றுக்கு 16,000 லிட்டர்தான்; ஆனால் பால் உற்பத்தியோ 18,000 லிட்டருக்குமேல் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி, கும்பகோணம், திருவாரூர், நாகப்பட்டினம், மாயூரம் முதலான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குளிர் சாதனங்கள்மூலம் பால் பதன நிலையத்திற்குப் பால் வந்து சேருகிறது.

கூடுதல் சாதனங்கள் அமைப்பதன்மூலம், குளிர் சாதனங்களின் உதவியுடன் பால் பாதன நிலையம் 30,000 லிட்டருக்கு மேற்பட்ட கொள்ளளவுத் திறனை அடைய முடியும்.

நான்காவது திட்ட காலத்தில் ரூ. 7-இலட்சம் செலவில் நிலையத்தின் கொள்ளளவுத் திறனை அதிகரிப்பதற்கான வழிவகைகள் வகுக்கப்பட்டுவருகின்றன.

கால்நடைத் தீனி கலவை நிலையமொன்றும் இயங்கிவருகிறது கடந்த ஓராண்டில் 100 டன்னுக்கும் அதிகமான கலவைத் தீனி தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பால் வற்றிய மாடுகளைப் பாதுகாக்கும் திட்டமொன்றையும் சங்கம் ரூ. 2.05 இலட்சம் செலவில் செயல்படுத்திவருகிறது.

ஐ. நா. ஊழியர்கட்கு ஊதிய உயர்வு

விலைவாசிப் புள்ளிக்கேற்ப வழங்கப்படும்

ஐ நா., ஆக. 5—

ஐ. நா. பேரவையின் செயலகத்தில் பணியாற்றும் பல்லாயிரக் கணக்கான ஊழியர்களுக்கு—நியூயார்க் நகரத்தில் விலைவாசிப் புள்ளி உயர்ந்திருப்பதன் காரணமாக—அதிகச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் பணியாற்றும் ஐ. நா. பேரவையின் ஊழியர்களுக்கும், அவர்கள் பணியாற்றும் இடங்களில் உள்ள விலைவாசிப் புள்ளிகளின் நிலைமைகளுக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படுகிறது.

அமெரிக்காவில் தற்போது நிலவிவரும் பணவீக்கத்தின் காரணமாக ஜெனீவாவில் பணியாற்றும் அமெரிக்க ஊழியர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகமாக இங்குள்ளவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

தமிழகக் காங்கிரசு பற்றி நிசலிங்கப்பாவுக்கு நம்பிக்கையில்லை

'அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதும் சந்தேகம்' என்கிறார்

கோலாலம்பூர், ஆக. 2—

தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலிலும் வெற்றி பெறுவது பற்றி அகில இந்தியக் காங்கிரசுத் தலைவரே ஐயப்பாடு தெரிவித்துள்ளார்.

"அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெறாமற்போனாலும், அதற்கு அடுத்த (1977) பொதுத் தேர்தலிலேனும் வெற்றி பெறக்கூடும்" என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மலாசியாவில் சுற்றுப்பயணம் செய்யச்சென்ற நிசலிங்கப்பாவிடம் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் மட்டுமின்றி அதற்குப் பின்னர் நடைபெற்ற இடைத் தேர்தல்களிலும் தோற்றுவிட்டது பற்றிச் சரமாரியாகக் கேள்விகள் கேட்கப்பட்டன; அதற்கு அவர்,

"அரசியல் வாழ்க்கையில் இந்த நிலைமைகள் மாறுகின்ற தன்மை வாய்ந்தவை"

என்றார்.

வாக்காளர் பட்டியல் திருத்தம்

நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதியினர் கவனிக்க:

நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஏ. நேசமணி காலமானதால், இத்தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற இருக்கிறது.

நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கும் நாகர்கோயில், கொளச்சல், பத்மநாபபுரம், குழித்துறை ஆகிய நகராட்சிப் பகுதிகளிலும், பிற கிராமப் பகுதிகளிலும் இடைத் தேர்தலுக்கு முன்னால் வாக்காளர் பட்டியலைத் திருத்தவேண்டும் என இந்தியத் தேர்தல் குழு உத்தரவிட்டுள்ளது.

நகராட்சிப் பகுதிகளில் வாக்காளர் பட்டியல் தீவிரமாகத் திருத்தப்படும்.

வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது ஆகஸ்டு முதல் நாளிலிருந்து ஆறும் நாள் வரை, வாக்காளர் பதிவு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளராகத் தகுதியுடையவர்களின் பெயர்களைப் பதிவுசெய்து வருகின்றனர். அவர்களது பணி ஆகஸ்டு 7 ம்நாள் முதல் 10-ஆம் நாள் வரை மேற்பார்வையிடப்படும்.

வாக்காளராவதற்குப் பின்வரும் தகுதிகள் பெற்றிருக்கவேண்டும்:—

முதலாவது—இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்; உளநிலை சரியானவராக இருக்க வேண்டும்; தேர்தல்களில் இலஞ்ச ஊழல் அல்லது வேறு குற்றங்கள் இழைத்ததற்காக—சட்டப்படி வாக்களிக்கத் தகுதியற்றவர் என அறிவிக்கப்படாதவராக—இருக்க வேண்டும்; 1968 சனவரி முதல் தேதியன்று 21 வயது நிறைந்தவராக இருக்க வேண்டும்; சாதாரணமாக அந்தத் தொகுதியில் வாழ்பவராக இருக்கவேண்டும்.

தகுதி பெற்றவர் அனைவரும் வாக்காளராகப் பதிவு செய்யப்படுகிற வகையில், தேர்தல் அதிகாரிகளுடன் ஒத்துழைக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி மேலும் குறைகிறது

சூலை 29-ஆம் நாளுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, இரண்டு புள்ளிகள் குறைந்து 680-ல் நின்றது.

காய்கறிகள், இறைச்சி, மிளகாய், புளி, நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலை குறைந்ததே இதற்குக் காரணம்.

சூலை திங்களில் பல்வேறு இடங்களில் குறைந்த வருமானக்காரர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரம் வருமாறு:—

கடலூர் 707; திருச்சிராப்பள்ளி 649; மதுரை 637; கோய புத்தூர் 715; நாகர் கோயில் 749.

கடலுக்குக் கீழ் காணப்படும் வளங்கள்

இந்தியாவின் எதிர்காலத்துக்கு மாபெரும் வாய்ப்பு

விண்வெளி ஆய்வில் உள்ள நாட்டம் கடலுக்குக் கீழேயும் செலுத்தப்படுமா?

இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவரான திரு. செஸ்டர் பௌல்ஸ், 'கடலில் பெருவெள்ளம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்திருப்பதாவது:—

பூமிக்கு மேல் எத்தனையோ மைல்களுக்கப்பால் பரந்த விண்வெளியை ஆராய மனிதன் எவ்வளவோ நேரமும், முயற்சியும், பணமும் செலவிடுகிறான்.

பூமியின் மேற்பரப்பில் பத்துக்கு ஏழு பங்காக இருக்கும் கடல்களை ஆராய்வதற்கு இதைவிட இன்னும் கூடுதலாக நமது வசதிகளை ஏன் பயன்படுத்தக்கூடாது?

கடலிலும் அதன் அடியிலும் ஆராயப்படாமல் கிடக்கின்ற வளங்கள் பல!

காலாகாலமாகக் கடல்கள், மீன்களைத் தந்துவருகின்றன; நாடுகளுக்கிடையிலும் பெருநிலக் கண்டங்களுக்கிடையிலும் அவை கப்பல் போக்குவரத்துக்கு வழியாய் அமைந்துள்ளன.

இப்போது பல ஆண்டுகளாகக் கடற்கரையை ஒட்டிய ஆழமற்ற கடல்களின் அடியிலிருந்து பெட்ரோல், இயற்கை வாயு, கனிப் பொருள்கள் ஆகியவை எடுக்கப்படுகின்றன; கடல் நீரிலிருந்து மக்னீசியம் முதலிய இரசாயனப் பொருட்கள் எடுக்கப்படுகின்றன.

கடலில் இன்னும் கண்டெடுக்க வேண்டிய வளம் நிறைய இருக்கிறது; உணவு, எண்ணெய், கனிப் பொருட்கள் இவற்றுக்குத் தேவை பெருகிவருவதால், கடல்களை இன்னும் ஆராய்ந்து கண்டுபிடித்துப் பயன்படுத்த வேண்டும்.

இக்காலத்தில் ஏற்பட்டுள்ள இத்தேவைகளின் பயனாக, கடலியல் விஞ்ஞானத்துக்குப் புதியதோர் ஊக்கம் பிறந்துள்ளது. கடலிலும் அதன் அடியிலும் உள்ள வளங்களைக் கைக்கொள்வதற்கு முன், அவற்றின் உண்மை—குணங்கள்—இருக்குமிடம் ஆகியவற்றைக் கருத்துடன் ஆராய வேண்டும்.

கடலாராய்ச்சி எனில், கடலை மட்டுமல்ல—அதன் அடித்தளம், அதன் அலைவாய்க்கரை, அதன் மேலுள்ள வாயுமண்டலம் இவற்றையும் விஞ்ஞான முறைப்படி ஆராய்வதாகும்.

ஏறக்குறைய ஓராண்டுக்கு முன்பு, அரபிக் கடல் ஆராய்ச்சிப் பயணத்தில் அமெரிக்க விஞ்ஞானிகள் குழு ஒன்றுடன், இந்திய விஞ்ஞானிகள் நால்வர் சேர்ந்து ஆராய்ந்தனர்.

எப்போதும் கடலிலிருந்து வகை வகையான மீன்கள் கிடைத்து வந்துள்ளன. மீனில் புரதச் சத்து ஏராளம்; பெரும்பாலான இந்தியர் உணவில் புரதம் குறைவு; உடனடியாக நீக்க வேண்டிய குறைபாடு இது.

மீனைக் காட்டிலும் மீனிலிருந்து தயாரித்த உணவு வகைகள் பெரிதும் உதவும். முன்பு, 'வீண்' என்று ஒதுக்கித் தள்ளிய மீன்களிலிருந்தும் ஊட்டச் சத்து மிக்க மலிவான 'மீன் மாவு'ப் பொருள்களை உருவாக்க மீன் தொழில் நுட்பக் கழகம் கண்டுபிடித்திருக்கிறது.

கேரளத்தில் கொச்சியில் இருக்கும் இந்திய மத்திய மீன்துறைத் தொழில் நுட்பக் கழகம், இன்று ஆராய்ச்சி அளவில் தயாரித்து வரும் ஒருவகை மீன் புரதத் திரட்டுப் பொருள் இனி, ஊட்டம் இல்லாதவர்களுக்கு மலிவாகவும் ஏராளமாகவும் புரதம் கிடைக்க வகைசெய்ய முடியும்.

இந்தத் திரட்டுப் பொருளைச் சப்பாத்தியாகச் சுடலாம்; அல்லது மற்ற உணவு வகைகளோடு சேர்த்துக்கொள்ளலாம்; சுவையாகவும் சத்தாகவும் இருக்கும். இந்தியாவில் இது ஏற்றுக்கொள்ளப்படுமா — பயன்படுமா என்பதைச் சோதித்து அறிவதற்குப் போதுமான அளவில் இதை உற்பத்தி செய்யும் பொருட்டு முன்னோடி ஆலை ஒன்றை நிறுவுவது பற்றி இன்று இந்திய அரசு ஆலோசித்து வருகிறது.

மீன் பண்ணைகள் மூலம் கடலுணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஏற்கனவே இந்தியா பெரும் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

குடாக்களிலும் கடற்கழிகளிலும் நீரின் சூழ்நிலையைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்தி வைக்க முடியும்; அத்தகைய நீர்நிலைகளில் மேலும் மேலும் 'மீன் பண்ணை'கள் அமப்பதற்குப் புதுப்புது வாய்ப்புகள் தோன்றுகின்றன.

கழிமுகங்களிலும், கடலோரச் சதுப்பு நிலங்களிலும் மலிவாக மீன் பண்ணைகள் அமைக்கலாம். இந்தோனேசியாவிலும் பிலிப்பைனிலும், நெல் வயல்—நீரிலும்கூட மீன் வளர்க்கிறார்கள்.

சிப்பி மீன் பண்ணைகள் அல்லது மீன் குளங்களை வைத்துப் பராமரிப்பதற்குச் சிறிது முதல் போதும்—பயிற்சி இல்லாத சில தொழிலாளர்கள் போதும்—முறைமுறமாகப் பாடுபட்டு வளர்த்தால், ஹெக்டேருக்கு ஒரு டன் மீன்கூட எடுக்கலாம்.

இன்று கிடைக்கும் நுட்பங்களைக் கையாண்டால் இந்தப் புதிய மீன் பண்ணைத் தொழில் இந்தியாவில் பெருத்த அளவில் வெற்றிகரமாகவும், ஆதாயமாகவும் நடக்க முடியும்.

இந்தியாவின் கடற்கரை ஓரம் பெட்ரோலியமும் நிறைய எடுக்கலாம் என்று தெரிகிறது. ஆழக்கடலிலும் துளையிடுவதற்கு இப்போது தொழில்நுட்ப முன்னேற்றத்தால் வகை கிடைத்துள்ளது; எனவே, கடலடியிலிருந்து தேவைப்படும் பொருள்களைத் துளைத்து எடுப்பதற்கு ஏராளமாகப் பரந்த இடங்கள் காத்திருக்கின்றன.

கடலடியைத் துளைத்துப் பெட்ரோலியமும் இயற்கை வாயுவும் எடுப்பதுமட்டுமன்றி, கடலின் நீரிலிருந்தும் எத்தனையோ இரசாயனப் பொருட்களைப் பிரித்தெடுக்கலாம்; பிரித்தெடுக்கும் தகுதியான முறைகள் கண்டுபிடிக்கப்படுவதற்கும், தேவைகள் உண்டாவதற்கும் ஏற்ப இப்பொருள்கள் பிரித்தெடுக்கப்படும்.

'கடலினையும் அதில் கிடைக்கக்கூடிய வளங்களையும் அமைதியாக ஆராய்ந்து அமைதிக்கே பயன்படுத்தவேண்டும்' என்று இந்தியா, அமெரிக்கா இரண்டும் வரித்துக்கொண்டுள்ளன. இம்முயற்சியில் ஒத்துழைக்கும் நிலையங்கள் பல; அவற்றில் ஒன்று—கடலடி அமைதிப்பணிகள் பற்றிய ஐ நா குழு.

அமெரிக்கத் தலைவர் லிண்டன் பி. ஜான்சன் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"ஆழ்கடல்களும் பெருங்கடல் அடித்தளங்களும் மக்கள் குலம் முழுமைக்கும் உரிய சொத்து என்றும் அவை அவ்வாறே இருந்து வரும் என்றும் நாம் உறுதி செய்யவேண்டும்."

இந்தப் பொதுச்சொத்து இந்தியாவின் எதிர்காலத்துக்கு மாபெரும் வாய்ப்பு வழங்குவதாகும்!

தொழிலாளர் சேமிப்பு நிதி

விதிகளைத் தளர்த்துவது பற்றிப் பரிசீலனை

புதடில்லி, ஆக. 5—

"தொழிற்சாலைகளில் பணியாளர்களாகச் சேரும் நாளன்றே தொழிலாளர் சேமிப்பு நிதித் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக ஆகலாம் என விதிகளைத் திருத்தலாம்" என்ற யோசனையை பெங்களூரில் கூடிய தொழிலாளர் சேமிப்பி நிதி மத்தியக் குழு பரிசீலனை செய்தது.

"தொழிலாளர் சேமிப்பு நிதித் திட்டத்தில், தொழிலக உரிமையாளர்களால் மேற்குறிப்பிட்ட நிதிக்காகத் தொழிலாளர்களுக்குச் செலுத்தும் பங்குத் தொகைகளின் மூலம் சேரும் நிதியிலிருந்தும் தொழிலாளர்கள் கடன் பெறலாம்" என்பதும் ஆலோசிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு மார்ச் திங்களில் இத்திட்டத்தின்கீழ் 41,870 தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

மார்ச் திங்கள் இறுதி நாள்வரை இத்திட்டத்தின்கீழ் ரூ. 1,054 கோடி சந்தாவாக வசூலிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு வங்கத்தில் மட்டும் 6,994 தொழில் நிறுவனங்களும்; 12,00,000 சந்தாதாரர்களும் இத்திட்டத்தில் பங்கேற்றிருக்கின்றனர்.

எல்லா மாநிலங்களையும்விட அதிகப்படியான தொழில் நிறுவனங்களையும் சந்தாதாரர்களையும் கொண்டது மேற்கு வங்கமாகும்.

அசாம் மாநிலம் கடைசியாக இருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் அசாம் மாநிலத்தில் 386 தொழில் நிறுவனங்களே பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. மொத்த சந்தாதாரர்கள் இம்மாநிலத்தில் 33,074 பேர் ஆவர்.

சூரியப் பிழம்புகளால் காந்தப் புயல்கள்

அமெரிக்கச் செயற்கைக் கோள்கள் முன்னறிவிப்பு

இரண்டு மாபெரும் சூரியப் புயல்கள், பூமியை நோக்கி எச்-எஸ்.டி, பூரோட்டான் அலைகளை விசி கடுமையான காந்தப் புயல்களை உண்டுபண்ணின. அவ்வாறு சூரியப் புயல்களில் ஒன்று 1966-ஐப் பிறகு ஏற்பட்டதிலிருப்பு வெளியிக்க சூரியப் பிழம்பாகும்.

விண்வெளியில் வலம் வரும் அமெரிக்கச் செயற்கைக் கோள்கள் இரண்டு, உலகம் பெருகிலும் பல நிலையங்களிலுள்ள புகைப் படக் கருவிகளும், மேற்படிச் சூரியப் பிழம்புகளைப் பதிவு செய்தன.

சூரியனில் தொந்தளிப்புக் அமைதியும் 11 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறி மாறி வரும்; இதன்படி இப்போழுது கொந் தளிப்புள் கிளம்பும் காலம். கொந்தளிப்பு வர வர அதிகமாகி 1969-ல் உச்சநிலை அடையப் போகிறது.

சூரியனில் இப்போது சிளம்பிய புயல பூமியை வந்து சேருவதற்கு நெடுநேரத்துக்கு முன்பே விண் வெளியில் செயற்கைக் கோள்கள் அவற்றைக் கண்டு பதிவு செய்து விட்டன.

சூரியப் புயல்களால் பூமியின் அயனி மண்டலத்தில் உண்டாகும் காந்த நிலை மாறுபடுகள் வானொலி ஒலிபரப்பு சூ இலை யூறு செய்யும்; இதை விலக்கச் சில சமயம் ஒலி பரப்பு அலை வரிசைகளை மாற்றிக் கொண்டு சமாளித்துவிடலாம்.

மேற்சொன்ன காந்தநிலை மாறு பாடுகள், மின்னிலை வழங்கும் சுப்பிகளில் மிகுதியான விசை யைச் சமத்தி 'டிரான்பார்மர்' களைக் கெடுத்துவிடக் கூடும்; எனவே, தருங்க மாறுதல்களைச் செயதுகொள்ளும்படி, அங்கிறு வனங்களுக்கு எச்சரிக்கை தேவை

பாதாள நாடக அரங்கு!

மண்ணுக்குள் கழிவு நீர்க் கால் வாய்கள் அமைக்கத் தொடங்கிய மனிதன், டிபப்பயர்க பாதாள ரியில், பாதள ரடைபாதை என்று மண்ணுக்குளேயும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கிவிட்டான்.

ஜெர்மன் கட்டரசிக்கு ஒரு டிரசைச் சேர்ந்த கட்டிடக் கலை நிடனர்களோ மேலும் ஒரு படி முனனேறி, பாதாள நாடக அரங்கு ஒன்றையே அமைக்கத் திட்டமிட்டுவிட்டார்கள்.

பூமியின் மேலேயிருந்து மண் னுக்கடியில் அமையும் இந்த நாடக அரங்குக்கு செல்ல சாலைப் போக்குவரத்தும் அமைக்கப்பட விருக்கிறது.

நாடக அரங்கின் மாதிரி டிரு வைப் பார்க்கும்போது, ஜெர்மன் கட்டிடக் கலை நிபுணர்களின் புதமைப் போக்கு நன்கு புலனு கிறது.

கழகத் தொழிற் சங்க வெற்றி

திருப்பூர் தனலட்சுமி ஆலை வேலை நிறுவைக் குழுவுக்கு (ஒர்க்ஸ் கமிட்டி) 22—7—68 அனறு தேர்தல் நடைபெற்றது; தி. மு. கழக, சங்கத் தலைவ ருமான தோழர்கள் இரா. பாலசு சாந்தி, சு. கந்தசாமி ஆகியோர் போட்டியிட்டு வலது கயபுனிலடுத தோழர்களின்பே பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றிப் பெற்றனர்.

திருப்பூர், திருப்பூர் டெக்ஸ் டைலை பஞ்சாலைக் கூட்டுறவுப் பண்டசாலே இயக்குர் தேர் தலில கழகத் தொழிற்சங்கத் தோழர் வி. பழனிசாமி, தமை எதிர்தது போட்டியிட்ட எச். எம். எஸ். முத்துவையில அதிக வாக்குள பெற்று வெற்றி பெற்றார்.

கல்வெட்டு ஆராய்ச்சி விரிவுரை

சென்னை திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் சார்பில் வடக்கு ஆண்டு கல்வெட்டுத் தொடர்ச் சொற்பொழிவுகள் தொடங்கி 4 விரிவுரைகள் நடைபெற்றுள் ளன. மீண்டும் இவ்வாண்டு ஆகஸ்டு 17-ம் நாள் மாலை 6-30 மணிக்கு, மேற்படி கல்லூரியில் கல்வெட்டுத் தொடர்ச் சொற் பொழிவுகளைக் கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர் வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார் தொடர்ந்து நடத்துவார்.

தமிழ் நூல்களில் விளங்காது கல்வெட்டுகளிலும் விளங்கும் பல செய்திகளை, இச்சொற்பொழிவு களினுல் தெரிந்துகொள்ளலாம். ஆதலின் தமிழின் ஆக்கம் சருதும் அன்பாகள் பலரும் கல்வெட்டு ஆராய்ச்சியில் மூளைந்து பயிலுதல் தமிழாட்டிற்கும், தமிழ் மொழிக் கும் செய்யும் பேருதவியாகும்.

ஆசிரியர்களுக்கு மாணவர்கள் அளித்த பாராட்டு

சென்னை கக்கீர் கழகத் திரு வள்ளுவர் தமிழ்க் கல்லூரி விடத வளர் வுப் மாண்வர்களும், தமிழ் எம்.ஏ. வகுப்பு மாணவர் களும் சாங்கள் அனவரும் தேர்வு பெற்றதை குறித்து 31—7—68 மல 6-மணிக்கு ஏ. ஆர். சி பள்ளியில் கல்லூரிப் பேராசிரியர் களுக்குத் தேநீர் விருந்து அளித் தனர்.

விருந்துக்குக் கழகக் காப்பாளர் திரு. கா. ஏ. அருணாசலம் தலைமை வகித்தார்; திருவாட்டி ஆர் பத்மாவதி அம்மையார் தேர்வு பெற்ற மாணவர்களுக்கும், கல் லூரியில் மாகவ மேரிலை அனப்பு பணியாற்றும் சுமார் 20 பேராசிரி யர்களுக்கும் பாராட்டுரை வழங் கினர்.

தலைமைவகித்த கா. ஏ. அருணு சலம் தம் உரையில், "சென்னையில் நீண்டகாட்சனாகத் தமிழ்ப் பணி யில்ஈடுபட்டுச் சலியாத உழைத்து வரும் இச்சமூகம், தமிழக அரசின் பாராட்டுதலைப் பெற்று விளங்கு கிறது. இதற்கெல்லாம் காரணம் இங்கு அமர்ந்துள்ள -- தொண்டுளம் தங்களோடு பூத்திக்கொண்டு இல வசமாகத் தொண்டாற்றும் பேரா சிரியர்களின் 'நன் முயற்சி யும் உழைப்புமேயாகும். சமூக முயற்சி களுகு எள்ளல் இயன்ற உதவி எப்போழுதும் உண்டு" என்றார்.

தேர்வு பெற்ற மாணவர்கள் தங்கள் பேராசிரியர்களுக்குப் பராட்டுத் தெரிவித்த பிறகு, பேரா சிரியர்கள் க. த. திருநாவுக்கரசு, சி. பாலசுப்பிரமணியம், புலவர் க பழனி ப லசுங்கரனுர், புலவர் கா. சி. தனக்கோடி ஆகியவர்கள் கல்லூரி செய்யும் நற்பணிகளைப் புகழ்ந்தனர்.

திருவாட்டி பார்வதி சுப்பராமன் தமிழ் வாழ்த்துப் பாடினர்; திரு வாட்டி ஜோ. தெய்வநாயகி நன்றி கூறினர்.

வர்த்தகம் வளரப் புதிய ஏற்பாடு

6 நாடுகளின் பொது அமைப்பு

அன்ருட வாழ்க்கைக்குப் பெரி தும் தேவைப்படும் பல பொருள் களை, ஒரு நாட்டிலிருது மற்றொரு நாட்டுக்கு தடங்கலின்றியும், தாரா ளமாகவும் செல்வதற்குத் தடை யாக ஏற்றுமதி—இறக்குமதி கட்டுப்பாடுகளும், சுங்க வரித் தீர்வை போன்ற விதிகளும் இருந்து வருகின்றன அலவா ?

இம்மாதம் முதல் நாள் முதல் 6-ஐரோப்பிய நாடுகளிடையே வர்த்தகம் நடைபெற இத்தகைய தடங்கல்கள் ஏதும் இருகாது.

இந்த 6-நாடுகளும் ஒருங் கிணைந்து பொருளாதாரப் பொது அமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு தங்களிடையே சூறுக தீடு ஏதும்ற சுதந்திர வர்த்தகம் புரிய முன் வந்துள்ளமைதான் இதற்குக் காரணம்.

இந்தப் பொது அமைப்பில் ஜெர் மன் கட்டாட்சிக் குடியரசும் அங் கம் வகித்துவருகிறது.

குழந்தை இலக்கியப் பரிசுப் போட்டி

நூலாசிரியர் -- பதிப்பகத்தார் கவனங்க :

சென்னை, ஆக. 8—

பதினுன்காவது முறையாக குழந்தை இலக் கியப் பரிசுப் போட்டிக்குச் சுவை யான நூல்களும், எடையிழந்து ஒரு தேதிகளும், ஆசிரியர்கள் -- வெளி யீட்டாளர்களிடமிருந்து வரவேற் கப்படுகின்றன. இந்த நூல்கள், குழந்தைகளுக்கு ஏற்றவையாக இருக்கவேண்டும். சமீழ நூல் ஒன் றுக்கு ரூ. 1,000 பரிசளிக்கப் படும்.

1966—67-ஆகிய இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த நூல் களான இப்போட்டியில் எனுத வெளிவந்த நூல்களை அனுப்பி வைக்க வேண்டுமென்று நாட்டுப் போட்டியிலோ அல்லது அதற்கு முன்பு போட்டியிலோ பரிசு பெற்ற நூல்களும் ஏற்கப்பட மாட்டா.

மூலநூல்களின் உரிமையாளர் களின் இசைவு பெருமல அனுப் பப்படும் மொழியாக்கம், மறு வெளியீடு, நூல் சுருக்கம் ஆகிய வையும் ஏற்கப்படமாட்டா. ஏற் னவே குழந்தை இலக்கியப் போட்டிக்கு அனுப்பிய நூல்களை யும் அனுப்பக்கூடாது.

மாநில -- மத்திய அரசுகளோ, அல்லது அரசாங்க நிதியுதவி பெறும் நிறுவனமோ நடத்திய போட்டியிலோ அல்லது அதற்கு நாட்டுப் போட்டியிலோ பரிசு பெற்ற நூல்களும் ஏற்கப்பட மாட்டா.

நூலழுவுக் கட்டணம் நூல் ஒன் றுக்கு ஆசிரியருக்கு மூன்று ரூபா யும், வெளியிட்டாளருக்கு ஐந்து ரூபாயும் ஆகும். நூல்கள் அனுப் வதற்கான கடைசி நாள் 1968 ஆகஸ்டு 16.

இப்போட்டி சம்பந்தமாக மேலும் விவரம் வேண்டுவோர், 'பளளிக கல்வி இயக்குநர், சென்னை-6' என்ற முகவரியில் குந்து பெற்றுக்கொள்ளலாம்.

மதுரையில் பால்பண்ணைத் திட்டம்

வளர்ச்சியில் முன்னேற்றம்

மதுரை, ஆக. 4—

ரூ. 87 இலட்சம் ஐ. நா. உதவி யுடன் மதுரையில் அமைக்கப்பட் டுக்கும பால் பண்ணைத் திட்டம், ந கொன்றரை 31,000 லிட்டர் பால் உறபத்தி செய்யும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது.

திட்டம் துவக்கப்பட்டு ஒன்றரை ஆண்டே ஆகிறது. இதற்குள் மதுரைக்குத் தேவைப்படும் 11,000 லிட்டர் பாலே இது வழங்குவதுடன் சராசரி நாளொன்றுக்கு 7,000 லிட்டர் பால் சென்னைக்கும் அனுப்பிவருகிறது.

மேலும் 10,000 லிட்டர் பாலை குளிர் பதனப்படுத்தும் மூன்று நிலை யங்கள், விருதுநகர்—திருவில்லி புத்தூர் — திண்டுக்கல் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக் கின்றன.

பேரிடி நாய்க்கனூரிலும், திரு நெலவேலியிலும், 2,000 லிட்டர் பால் பதனப்படுத்தும் சிறிய நிலை யங்கள் ஏற்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளன. இதுபோன்ற இரு நிலையங்கள் உத்தமபாளயத்தி லும், சிவகங்கையிலும் அமைக்க வும் ஆலோசனை செய்யப்படு கிறது.

அதிக பளு ஏற்றுதீர்!

லாரி ஓட்டுநோருக்கு வேண்டுகோள்

லாரிகளில் இனி அளவுக்கு மீறி (ஓவர் லோடு) சரக்கு ஏற்றினுல், 1969-ஆம் ஆண்டைய மோட்டார் வாகனச் சட்ட விதி 72 (1)-ன்படியும், 78 (1)-ன்படியும் (P.L.W) பரிவிட எடைக்குமேல் உள்ள அதிகப் பாரம சரக்கு எனி, காவல் துறை அதிகாரி களால் இடைவெளியில் இறக்கி வைக்கப்படும்; எனவே, ஓவர் லோடு ஏறறுவதைத் தடுக்க ஒத் துழைக்கும்படி சேலம் மாவட்ட லாரி உரிமையாளர் சங்க ஓவர் லோடு குழுத் தலவர் எஸ். வி. நாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வீரப்பன்சத்திரம் பேரூராட்சிக் கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள்

வீரப்பன் சத்திரம் பேரூராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 31—7—68 மாலை 8-மணிக்கு தலவர் டி. எம். இராமசாமி தலை மையில் நடந்தது: அதுபோது, வீரப்பன்சத்திரம் பேரூராட்சி எல் லைக்குள் 1920-ஆம் ஆண்டையை சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் கட்டிடங்கள் கட்டு தல்சம்பந்தமான பிரிவுகளை அமல் படுத்தவும், அவ்வாளுக்கு கேசெச்சுக் சட்டணம் நிர்ணயம் செயது வருலிக்கவும், அரசினின் பாதி மானியத் தொகையுடன் பேரூராட்சி எல்லைக்குள் இரண்டு தார் ரோடு போடவும், மொத்தம் சுமார் ரூ. 75,000 மதிப்பில் எல்லா வார்டுகளிலும் வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செய்ய டெண் டர்கள் அனுமதித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

ஆட்டாங்குடியில் அரிசன நாள் விழா

வள்ளுவர்--அண்ணு படங்கள் திறப்பு

திருவாரங்குளம் ஊராட்சி ஒன்று யத்தைச் சார்ந்த கவிஞ்சு கிழக்கு ஊராட்சியிலுள்ள ஆட்டாங்குடி கிராமத்தில் 30—7—68 அன்று அரிசன விழா கொண்டாட்டப்பட் டது. திருவாரங்குளம் ஊராட்சி ஒன்றியத் தலவர் டி. ஏ. ஏஸ். தங்கவேலு தலைமைவகித்தார்.

ஆட்டாங்குடி கிராம வாலுெலி மன்றக் கட்டிடத்தை புதுக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் இராஜகுமார் விஜயகுமார் தொண்டைமான் பி ஏ. திறந்து வைத்தார்.

திருவள்ளுவர் திருவுருவப் படத்தை புதுக்கோட்டை சேக் தாவுத் அவர்களும், பேரறிஞர் அண்ணு அவர்களின் திருவுருவப் படத்தை திருவரங்குளம் சீரனித் தலவர் அ. பெரியண்ணன் அவர் களும் திறந்து வைத்தார்கள்.

புதுக்கோட்டை கேட்டரசித் தலவர் வி. சுப்பைகாதன் பி ஏ. அரிசன நாள் விழாவின் முக்கியத் துவத்தைப் பற்றி எடுத்துரைத் தார்.

பின்னர் எல்லாக் கட்சிகளையும் சார்ந்த தலவர்களும் அரிசன மக் களுக்கு அரசு செய்யவேண்டிய திட்டங்களைப் பற்றி எடுத்துக் கூறினர்.

மாவட்ட அரிசன நல அதிகாரி ஏழைக் குழந்தைகளுக்கு சிலேட்டு கள், பேனு, நோட்டுப் புத்தகங் கள் ஆகியவைகள் இலவசமாக வழங்கினர்.

கவிஞ்சு கிழக்கு ஊராட்சி மன் றத் தலவர் அருங்குளலிங்கம் அவர்கள் நன்றி கூறினர்.

இரவு, மக்கியப்ப நகர் அஞ்சலி தேவி குழுவினரின் கரகஆட்டம் மிக விமரிசையாக நடைபெற்றது.

தோப்புத்துறை எம். ஜி. ஆர். மன்றம்

தோப்புத்துறை எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல், 6—7—68-ல், தர. சிவகங்கரம் தலைமையில நடைபெற்றது; கீழ் கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலவர் : என். அப்துல் மஜீது பி.எஸ்சி.; செயலாளர் : ஜி கோவிந்தராசு; துணைச் செய லாளர் : சென. இன்பசேகரன்; பொருளாளர் : மு.அபீப்; பிரதி நிதி : ஒய். ஏ. கரீம்; எட்டு பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

துயர் துடைப்பு நிதி

சென்னை, ஆக 5—

சென்னை கலில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு வதற்காக தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு சூலை 25, 28, 29 ஆகிய நாட்களில் வந்த தொகை ரூ. 2,219,80.

இத்துடன் மொத்தம் ரூ 38,16,587-80 சேர்ந்துள்ளது.

அரும்பொருள் களஞ்சியத்தில் நவீன ஓவியங்கள்

சென்னை, ஆக 5—

சென்னையிலுள்ள அரசாங்க அருங்பொருள் களஞ்சியத்தில், நவீன ஓவியகள் கொண்ட பகுதி துவங்கப்பட்டிருக்கிறது; இந்தி யாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஓவியர்களின் ஓவியங்கள் அதில் இடம் பெற்றுள்ளன. புகழ்பெற்ற பிரெஞ்சு ஓவியர்களின் படைப்புகள் அதில் குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

இக்காட்சிப் பகுதி, ஆகஸ்டு 1-ம் நாளிலிருந்து பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப் பட்டிருக்கிறது.

உரிமை கோருவோர் கவனத்திற்கு :

சென்னை, ஆக. 5—

சூன் 30-ம் நாள்வரை, சென்னை பேலீசுக் கமிஷனர் அலுவலகத் தில் பொது மக்களால் உரிமை கோரப்படாமல் இருக்கும் பொருள் கள், ஆகஸ்டு 30-ந் தேதிக்குப் பிறகு விற்பனை செய்யப்பட்டு விடும்.

இந்தப் பொருள்கள் உரிமை கொண்டாடக்கூடியவர்கள், இந் தத் தேதிக்கு முன்னதாக கமிஷன ரிடம் சென்று எழுத்தமூலம் அதைத் தெரிவித்துக்கொள்ள லாம்.

பம்பாய் கொலாபாவில் தென்காசி வெற்றிவிழா

பம்பாய்—கொலாபா அறிஞர் அண்ணு மன்றத்தின் சார்பில், 28—7—68-ல், கடற்கரைத் திட லில், சு. சுப்பிரமணியம் தலைமை யில், தென்காசி வெற்றி விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் பன்னீர்செல்வம் வர வேற்புப் பேசினர்; மற்றும் தோழர்கள் கொ. வள்ளுவன், முகவை அமுதன், ந. கிருட்டினன், எம். இராசன ஆகியோர் பேசினர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. செயலாளர் நன்றி கூறினர்.

அசோக்லேண்டு தொழிலாளர் அண்ணு மணி விழாக் குழு

22—7—68 அன்று நடைபெற்ற அசோக் லேண்டு தி. மு. க. தொழிலாளர்கள் கூட்டத்தில், பேரறிஞர் அண்ணு அவர்களின் 60-வது ஆண்டு பிறந்த நாள் விழாக் குழு ஒருமனதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டது.

விழாவினை சிறப்பிக்க செங்கற் பட்டு மாவட்டச் சட்டமன்ற உறுப் பினர்கள் அ. பொ. அரசு, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், பி. சிவசங் கரன் எம்.பி. ஆ, பி யோரை அழைக்க முடிவு எடுக்கப்பட்டது.

குழு உறுப்பினர்கள் விவரம் :—

தலவர் : எம். எஸ். வீரசேரி; தணைத் தலவர் : இராஜசேகரன்; செயலாளர் : கே. வீரசாமி; துணைச் செயலாளர்: எத்திராசு; பொருளாளர் : வி. ஆர். சீனி வாசன்.

மறைவு

சுயமரியாதை இயக்க காலம் தொட்டு தீராவிடர் கழகம்—தி. மு. கழகம் ஆகிய அமைப்புக்களில் பனியாற்றி, 1968 ஏப்ரல்வரை அருப்புக்கோட்டை வட்டம் கல்லூ ரணி தி. மு. கழகச் செயலாள ராகப் பணியாற்றி 70 வயது முடி வுற்ற செயல்வீரர் தி. சேகு மூத்தித், 25—7—68-ல் இயறகை யெய்தினர். அவர் மறைவுற்ற செய்தி கேட்டு அருப்புக்கோட்டை நகர தி.மு.க. செயலாளர் ப.பெரு, ஸல்தான் நேரில் சென்று தமது இரங்கலைத் தெரிவித்தார்.

26—7—68-ல் சவ அடக்கம் நடைபெற்றது; கல்லூரணி கழகத் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்; அதுபோது, இரங் கற் கூட்டம் நடைபெற்றது. செய லாளர் கா. சு. நடராசன் தலைமை யில் தோழர்கள் அ. ஆமர் சிங், மு. வி. அருணாசலம், வா. சு. நட ராசன் ஆகியோர், மறைந்த தோழ ரின் பனிகள் பற்றிப் பேசி அஞ் தாபம் தெரிவித்தனர்.

பாங்கிகளை அரசுடைமையாக்கும் நோக்கம் இல்லை!

உள்ளக்கிடக்கையை மொரார்ஜி தேசாய் வெளிப்படுத்திவிட்டார்

பாங்கி ஊழியர் உரிமையைப் பறிக்கும் மசோதாவுக்குக் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, ஆக. 5—

"பாங்கிகளை நாட்டுடைமையாக்கிஞல்தான் பொருளாதாரத்தில் விரும்பத்தக்க மாறுதலைச் செய்ய முடியும் என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ள இயலாது; மொத்தத்தில் அரசு அவ்விதம் கருதவில்லை"

என்று துணைத் நிதிலையமைச்சர் மொராரிஜி தேசாய் மக்களவையில் கூறியிருக்கிறர்.

பாங்கித் தொழிற் சட்டங்கள் திருத்த மசோதாவின் முதல் வாசிப்பு, இன்று மக்களவையில் நிறைவேறியது.

காலதாமதம் ஏற்படுத்தும் திருத்தத் தீர்மானங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

'மசோதாவை மீண்டும் பொறுத்துக் குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டும்' என்ற தீர்மானம் உட்பட மற்றும் இரு திருத்தத் தீர்மானங்களும் குரல் வாக்கெடுப்பு மூலம் நிராகரிக்கப்பட்டன.

பாங்கிக் கட்டிடங்களில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தும் உரிமைக்குக் கட்டுப்படுத்தும் 38-வது பிரிவை, திரு. சட்டர்ஜி கடுமையாக எதிர்த்தார்; 'பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டாலன்றி இந்தப் பிரிவு ஏற்கத்தக்க தல்ல; இந்தப் பிரிவில் உள்ள தண்டனே பகுதிகளையாவது குறைக்கப்படாம் நீக்கிவிட வேண்டும்' என்றார் அவர். எதிர்க் கட்சியினர் இதனே ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

"பாங்கிகளை நாட்டுடைமையாக்காததே முன்கூட்டியே தடுப்பதற்காகத்தான் இம்மசோதாவை கொண்டுவரப்படுகிறது என்று ஒர் எண்ணம் இருந்துவரும் நிலையில், தண்டத் தலைமையமைச்சர் இதை அவசரமாகக் கொண்டு வருவது முறையல்ல" என்று திரு. சட்டர்ஜி கூறினர்.

இம்மசோதாவை எதிர்த்து மற்றும் வலது கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் இந்திரஜித் குப்தா, சீனிவாச மிச்ரா, காங்கிரசு உறுப்பினர் திருமதி தாராசேசுவரி சின்கா ஆகியோர் பேசினர். மற்றும் சில காங்கிரசு உறுப்பினர்களும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தண்டத் தலைமையமைச்சர் திரு. மொராரிஜி தேசாய் விவாதத்துக்குப் பதிலளிக்கையில், 'ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக உள்ள பிரிவு அவசியமே' என்றர்.

"அமைதியான மறியல்போன்ற சட்டரீதியான நடவடிக்கைகளைத் தடுக்கும் பேச்சுக்கே இடமில்லை" எனர்.

"ஆனல், இடைஞ்சலின்றி செயல்படுவதைத் தடுப்பதற்கு போன்ற சட்டவிரோதமான நடவடிக்கைகள் பல இடங்களில் அரி கரித்து உயர்நீதிமன்றங்கள் தலையுத்தரவு பிறப்பிக்க வேண்டியிருந்ததால் இந்தப் பிரிவை மசோதாவில் சேர்க்க நேர்ந்தது" என்றும் அவர் கூறினர்.

"அலுவலகங்கள் செயல்படுவதைத் தடுத்து நிறுத்தலோ, யாரையும் பாங்கிகளுக்குள் போகாதபடி தடுக்கவோ தொழிலாளருக்கு உரிமை இல்லை" என்றர்.

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

ஆக. 8: பெருமகளூர்; 10: கோவை 17-வது வட்டம்; 11: கோட்டை; 12: செல்லூர்; 13: தாடிக்கொம்பு; 14: சிங்கம்புணரி; 15: சேழன்மாளிகை; 17: ஒமலூர்; 18: சேலம்; 20: அரூர்; 21: தர்மபுரி; 25: கோவை; 27: மன்னர்குடி; 28: திட்டக்குடி.

கழக உறுப்பினர்கள் கண்டனம்

புதுடில்லி, ஆக. 6—

நாடாளுமன்ற மக்களவையில், பாங்கிகள் சட்டத் திருத்த மசோதாமீது நடந்த விவாதத்தின்போது, கழக உறுப்பினர் திரு. செ. கந்தப்பனுக்கும் — தண்டத் தலைமையமைச்சர் மொராரிஜி தேசாய்க்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

விவாதத்துக்குப் பதிலளித்து மொராரிஜி பேசுகையில், 'இந்தத் திருத்த விதிகள் நிறைவேறுமவரை காத்திராமல் பாங்கிகள் இப்போதே செயல்பட வேண்டும்' என்றர்.

"சட்டம் நிறைவேறுமுன்பே செயல்படுத்தச் சொல்லுவது விசித்திரமானது" என்று எதிர்க் கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர்.

"முன்கூட்டிச் செயல்படுத்தும்படிச் சொல்லுவதால், பாங்கிக் காரர்களோடு கூட்டுச் சேர்ந்திருப்பதாகவோ, சதி செய்வதாகவோ கருதக்கூடாது" என்றர் மொராரிஜி.

அப்போது கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள் எழுந்து,

"மூன்று தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டுவந்தீர்களே — அந்தச் சட்டத்தைப் பற்றி நகைத் தொழிலாளருடன் கலந்து ஆலோசித்த துண்டா?"

என்று கேட்டார்.

"இது வேறு — அது வேறு; இரண்டும் ஒன்றல்ல" என்றர் மொராரிஜி.

சி. டி. தண்டபாணி

கழக உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி பேசுகையில் குறிப் பிட்டதாவது :—

• கட்டுப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் சிறு தொழில்களின் இயக்கு நர்கட்குக் கடன் கொடுக்கும் விஷயத்தில் ஸ்டேட் பாங்கியின் சாதிம ஊக்கமூட்டத்தக்கதாக இல்லே.

• இந்த மசோதாவை நிறை வேற்றுவதன்மூலம் வணிக பாங்கிகளால் எதுவும் புதிதாகச் சாதிக்கமுடிட முடியும் என்று நம்ப முடியாது.

பாங்கி ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

தென் மாநிலங்களில் வேலைநிறுத்தம்— ஆர்ப்பாட்டம்

சென்னே, ஆக. 5—

நாடாளுமன்றத்தில் இன்று விவாதத்துக்கு வந்த பாங்கி சட்டத் திருத்த மசோதாவின் சில பிரிவுகள் பாங்கி ஊழியர்களுக்கு விரோதமாக இருப்பதால், தமிழகம்—கருநாடகம்—கேரளம் ஆகிய தென் மாநிலங்களேச் சேர்ந்த பல வாயிர்க்கணக்கான பாங்கி ஊழியர்கள் இன்று காலே ஒரு மணி நேரம் வேலைநிறுத்தம் செய்தனர்.

தமிழ்நாட்டில் இந்த வேலே நிறுத்த ஆர்ப்பாட்டத்தில் 9,000 பாங்கி ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

நிருபர்கள் முன்னேற்றக் கழகத்தினர், திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகும், வெளியீடு பவராகவும், அச்சுப்பொறியாகவும் கொண்டு அழகி அச்சகத்தில் (24, குன்னூர்சாலை) வெட்டுவாணம், சென்னை.18) அச்சிட்டு வெளியிடுகிறது.

ஹோவதி பற்றி டெல்லியில் பேச்சு

தமிழகச் சார்பில் பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி வாதாடுவார்

நெல்லே -- குமரி இருப்புப் பாதை அமைக்கவும் வற்புறுத்துவார்

சென்னை, ஆக. 6—

கருநாடக அரசு, காவிரியாற்றில் புதிதாக அமைக்கத் திட்டமிட்டிருக்கும் ஹோவதி அணே சம்பந்தமாகத் தமிழக — கருநாடக அரசுகளுக்கிடையே பேச்சுவார்த்தை, ஆக. 20, 21-ம் நாட்களில் நடைபெறும்.

இப்பேச்சுவார்த்தையில், தமிழக அரசு சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களும், கருநாடக அரசு சார்பில் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்களும் கலந்துகொள்வர்.

இப்பேச்சுவார்த்தை மத்திய நீர்ப்பாசன அமைச்சர் முன்னிலையில் நடைபெறும்.

ரூ. 16 கோடி செலவாகக்கூடிய கருநாடக அரசின் இத்திட்டத்துக்கு மத்திய அரசின் ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லே.

"இத்திட்டத்தால், தமிழக விவசாயிகள் பாதிக்கப்படுவர்" என்று தமிழக அரசு தனது அச்சத்தைத் தெரிவித்துள்ளது.

ஆனல் கருநாடக அரசோ, '1924-ம் ஆண்டைய காவிரி நீர்ப் பங்கீட்டு ஒப்பந்தப்படி, இத்திட்டத்தை நிறைவேற்ற கருநாடக அரசுக்கு முழு உரிமை உண்டு' எனறு கூறுகிறது.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு, ஆக. 19-ம் நாள் திரு. கருணுநிதி அவர்கள் டெல்லிக்குப் புறப்படுகிறர். டெல்லியில் அவர் தங்கியிருக்கும்போது இரவிலே அமைச்சரைச் சந்தித்து, திருநெல்வேலி—கன்னியாகுமரி இரயில் பாதை உட்பட்ட சில புதிய இரயில்பாதைகளே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்குமாறு வற்புறுத்துவார்.

காங்கிரசு ஆளும் மாநிலத்தில் கல்விக்குத் தரும் விலை!

புதுடில்லி, ஆக. 5—

"மைசூரில் இரு மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் பெறுவதற்கு ரூ. 80,000—ரூ. 40,000 தரவேண்டியிருக்கிறது" என்று காடாளுமன்ற மேலவையில், பி. சேசு. குழுத் தலேவர் எம். கோவிந்த ரெட்டி புகார் செய்தார்.

பல்கலேக் கழக மானியக் குழு மசோதாமீது அவர் பேசுகையில், 'எல்லா மருத்துவ—பொறியியல் கல்லூரிகளும் நாட்டுடைமை யாக்கிவிட வேண்டும்' எனக் கோரினர்.

இக்கருத்தை, முன்னுள் கல்வி அமைச்சர் சக்கள, பலமாக ஆதரித்தார்; 'இப்படிப் பணம் வாங்குவது, 'கல்வியில் கள்ளமார்க்கெட் நடைபெறுகிறது' எனக் கூறப் படும் நிலே ஏற்பட்டுவிடும்; மைசூர் அரசு, இதுபோன்ற நிலேமையைத் தவிர்க்க முயலுவதாக எண்ணிடம் உறுதிமொழி அளித்தது' எனக் குறிப்பிட்டார்.

அணு குண்டைத் தடை செய்க!

ஜப்பான் தலைநகரில் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, ஆக. 5—

ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்ட 23-வது ஆண்டு நிகழ்வு விழாவை முன்னிட்டு, அணு ஆயுத உற்பத்தியைத் தடைசெய்யக் கோரி ஆயிரக்கணக்கான பேர் இன்று டோக்கியோ நகர வீதிகளில் வலம் வந்தனர்.

ஆருயிர்த்தடுக்கு மேற் பட்ட இடதுசாரிக் கொள்கையுடில் கலந்துகொண்டனர்.

மதுவிலக்குத் திட்டத்துக்கு மத்திய உதவி

ஐந்தாண்டுக்கு ரூ. 315 கோடி

ஒதுக்கப்படுமாம்

புதுடில்லி, ஆக. 5—

"மதுவிலக்கை அமுலாக்கும் முயற்சியில் மாநிலங்களுக்கு உதவி செய்யும் வகையில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ரூ. 315 கோடி ஒதுக்கமுதிய அரசு கருதியிருக்கிறது"

என, தண்டத் தலைமையமைச்சர் மொராரிஜி தேசாய், நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறர்.

"எந்தக் காரணத்தைக் கொண்டாலும், மதவிலக்கைத் தளர்த்தியிருந்தது, இனிமேல் மீண்டும் மதுவிலக்கைச் செயல்படுத்த விரும்பும் மாநிலங்களுக்கும் இவ்வதவி தரப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

"ஆனல், இனிமேல் மதுவிலக்கைத் தளர்த்தி, மீண்டும், செயல்படுத்த விரும்பும் மாநிலங்களுக்கு இவ்வுதவி கிடைக்காது" என்றும் அவர் தெரிவித்திருக்கிறர்.

புடைய இவர்கள், அமெரிக்கத் தூதுவரகத்துக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

அணு ஆயுதத் தடைக் குழுவின் சார்பில் இங்கு நடைபெற்ற ஆறு நாள் மாநாட்டின் கடைசி நாளான இன்று இந்த ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

அணு ஆயுதத்தைத் தடை செய்யக் கோரியும், வியட்நாம போரை நிறுத்தி அமெரிக்கப் படையினரைத் திரும்பப் பெறுமாறும் இவர்கள் கோரிக்கை எழுப்பினர்.

எட்டு வெளிநாடுகளிலிருந்து வந்த 14 பிரதிநிதிகள் இயமாநாட்டில் கலந்துகொண்டனர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8—8—68

திருத்துறைப்பூண்டி

நகர தி மு. க. சார்பில் தென்காசி வெற்றிவீரர் கா. மு. கதிரவனுக்குப் பாராட்டு மாலே 6 மணிக்கு தெற்கு வீதியில்; தலேவர்: வை. சுப்பிரமணியம்; பேசுவோர்: புதுவை ஈ. குபேர், மன்னே ப. நாராயணசாமி, ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., கு. சண்முகம், டி. டி. எஸ். கல்யாணசுந்தரம், மு. க. அமீர்.

நடமாடும் நூலகம்

சென்னே மாவட்ட நூலகக் குழுவின் சார்பில், நடமாடும் நூலகத்தைக் கல்வியமைச்சர் தி.மு. இரா. நெடுஞ்செழியன் துவக்கி வைக்கிறர்.

இந்த விழா 8—8—68 மாலே 5-30 மணிக்கு மவுண்ட்ரோடில் உள்ள சென்னே மாவட்ட மத்திய நூலகத்தில் நடைபெறும்; டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் விழாவுக்குத் தலேமை வகிப்பார்.

பச்சையப்பன் கல்லூரியில் படத் திறப்பு விழா

சென்னே, ஆக 6—

ஆகஸ்டு 12, 13, ஆகிய நாட்களில் சென்னே பச்சையப்பன் கல்லூரியில், தமிழ் மன்றச் சார்பில், முதலமைச்சர் அண்ணு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ரோசிரியர் டாக்டர் மு. வரதராசனர் ஆகி யோரின் படத் திறப்பு விழா நடை பெறவிருக்கின்றது.

12—8—68 அன்று நடக்கும் திறப்பு விழாவில், டாக்டர் மு. வரதராசனர் படத்தை அதிபர் அண்ணு அவர்கள் திறந்துவைத்து மலர் ஒன்றை வெளியிடுவர்.

டரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தைப் பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணுநிதி அவர்கள் திறந்து வைப்பார்.

13—8—68 அன்று முதலமைச்சர் அண்ணுவின் படத்தை புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். திறந்து வைப்பார்.

மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்பு

சென்னே 60-வது வட்டம் இராயபேட்டை அய்வையர் முதலி தெருவில் உள்ள மாநகராட்சி உயர்நிலேப் பள்ளிக்கான தனிக் கட்டிடத்தை, 7—8—68 மாலே 5-30 மணிக்கு ஒளவை டி. கே. சண்முகம் திறந்துவைப்பார்; இவ் விழா, தனியோர் சி. பி. பல வண்ணன் படத்தையும் திறந்து வைக்கிறது—திரு. என். தனசிங்கம் முனனிலேயிலும் நடைபெறும்.

வேலூர் மருத்துவமனை பொன்விழா

குடியரசுத் தலேவர் கலந்துகொள்கிறர்

வேலூர், ஆக 5—

வேலூர் அரசினர் பெண்டலண்டு மருத்துவமனேயின் பொன் விழாவையொட்டி ரூ 4 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் மூன்றறக்குக் கட்டிடத்திற்குக் குடியரசுத் தலேவர் திரு. ஜாகிர் உசேன் அடிக்கல் நாட்டுவார்.

இந்த அடிக்கல் நாட்டுவிழா செப்டம்பர் 9ஆம் நாள் நடைபெற விருக்கிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கிறது"

என மக்களவையில், நலத் துறைத் துணேயமைச்சர் பி. எஸ். மூர்த்தி தெரிவித்தார்.

"இத்திட்டத்துக்கு இதுவரையில் மத்திய அரசு எவ்வித உதவியும் செய்யவில்லே" எனறும் அவர் தெரிவித்தார்.